பக்கங்கள்: 07

# காலைக்கதிர்

Kalaikkathir

மாலைப்பதிப்பு

சாயல் 03 வள்ளுவர் ஆண்டு 2053 வைகாசி 20 வெள்ளிக்கிழமை 03.06.2022 கதிர் 102

## பிரதமரின் உரை; 2 நாள்கள் விவாதம்



பொருளாதார மறுசீரமைப்பு மற்றும் அரசியல் மறுசீரமைப்பு சம்பந்தமாக பிரதமர் ரணில் விக்கிரமசிங்க, நாடாளுமன்றத்தில் எதிர்வரும் 7 ஆம் திகதி சிறப்புரையாற்றவுள்ளார்.

ஜூன் மாதத்துக்கான 2

## அம்பாறையில் 3,000 லீற்றர் டீசலுடன் ஒருவர் மாட்டினார்



அம்பாறை மாவட்டம், அக்கரைப்பற்று - பட்டியடிப்பிட்டி பிரதேசத்தில் தேவைக்கு அதிகமாகப் பதுக்கிவைக்கப்பட்டிருந்த 3 ஆயிரம் லீற்றர் டீசல் அக்கரைப்பற்றுப் பொலிஸாரால் கைப்பற்றப்பட்டமையுடன் சம்பந்தப்பட்ட ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

சூட்சுமமான முறையில் மூன்று நீர்த் தாங்கிகளில் சேகரிக்கப்பட்டு 2

## தெற்கில் தொடரும் துப்பாக்கிச்சூடு; களுத்துறையில் இருவர் படுகொலை

### பொலிஸார் தீவிர விசாரணை



தெற்கில் அண்மைய நாள்களாகத் துப்பாக்கிச்சூட்டுச் சம்பவங்கள் அதிகரித்துள்ளன. இன்று களுத்துறை மாவட்டத்தில் வெவ்வேறு இடங்களில் இருவர் சுட்டுப் படுகொலை செய்யப்பட்டுள்ளனர்.

அளுத்கம - மொரகல்ல பிரதேசத்தில் இன்று காலை துப்பாக்கிச்சூட்டுச் 2

# தமிழர்களுக்கு தீர்வு வேண்டும்!

### சுமந்திரன் எம்.பி. திட்டவட்டம்



**அரசு நடைமுறைப்படுத்த உத்தேசித்துள்ள புதிய அரசமைப்பின் மூலம் தமிழ் மக்களின் நீண்டகால தேசியப் பிரச்சினைக்கு தீர்வு காணப்பட வேண்டும் என்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பேச்சாளரும் நாடாளுமன்ற உறுப்பினருமான ஜனாதிபதி சட்டத்தரணி எம்.ஏ. சுமந்திரன் வலியுறுத்தினார்.**

**தமிழ், சிங்களம், ஆங்கிலம் ஆகிய ஊடகங்களுக்கு மும்மொழிகளில் வழங்கிய செவ்வியிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார்.** 2

## "கோட்டா காஸ் தா"

### மக்கள் வீதி மறியல் போராட்டம்

ஐந்து மாதங்களாக சமையல் எரிவாயு இன்றி தாம் பரிதவிக்கிறோம் எனவும், எனவே, தங்களுக்கு கூடியவிரைவில் சமையல் எரிவாயுவை வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் என வலியுறுத்தியும் நோர்வூட், புளியாவத்தை கடை வீதியில் வசிக்கும் மக்கள், இன்று போராட்டத்தில் குதித்தனர்.

ஹட்டன் - சாஞ்சிமலை பிரதான வீதியை மறித்து, வீதி நடுவே 'வெற்று' 2



## அமைச்சுப் பதவி அழைப்பை அடியோடு நிராகரித்த ராஜித



சர்வகட்சி அரசில் இணைந்து, அமைச்சுப் பதவியை ஏற்குமாறு விடுக்கப்பட்ட அழைப்பை ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர் ராஜித சேனாரத்ன அடியோடு நிராகரித்துள்ளார்.

அவருக்கு சுகாதார அமைச்சுப் பதவியை வழங்குவதற்கு ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ கூட பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவிடம் இணக்கம் தெரிவித்திருந்தார். இது தொடர்பில் ராஜிதவுக்கும் தூது அனுப்பப்பட்டது. 2

## பயணப் பைகளின் விலையும் உயர்வு




பாடசாலை, தொழில், வெளிநாட்டுப் பயணங்களுக்குப் பயன்படுத்தும் பைகள் உள்ளிட்ட அனைத்து வகையான பயணப் பைகளின் விலைகளும் கணிசமான அளவு அதிகரித்துள்ளன. 2

## மன்னாரில் கடற்படை வெறியாட்டம்; ஏழு மீனவர்கள் வைத்தியசாலையில்

(ந.லோகதயாளன்)

மன்னார் - பேசாலையில் இருந்து கடல் தொழிலுக்குச் சென்ற மீனவர்கள் மீது கடற்படையினர் தாக்குதல் மேற்கொண்டுள்ளனர். இதனால் பாதிக்கப்பட்ட 7 மீனவர்கள் வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளனர்.

பேசாலையில் இருந்து நேற்று மாலை 3 மணியளவில் கடலுக்குப் புறப்படத் தயரான படகுகளைக் கடற்படையினர் தீவிர சோதனைக்கு உட்படுத்தியபோது கடற்படையினருக்கும் மீனவர்களுக்கும் இடையே கடும் வாய்த்தர்க்கம் ஏற்பட்டது. இதன்போது கடற்படையினர் மீனவர் ஒருவர் மீது கடும் தாக்குதல் மேற்கொண்டதால் பாதிப்படைந்த மீனவர் பேசாலை வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டார். இதன்பின்பு மீனவர்கள் கடற்படையினரிடம் மன்னிப்புக் கோரி சமரசத்தின அடிப்படையில் தொழிலுக்குச் சென்றனர்.

இவ்வாறு தொழிலுக்குச் சென்ற மீனவர்கள் மாலை 5.30 மணியளவில் தலைமன்னார் கடற்பரப்பில் தொழிலில் ஈடுபட்டுக்கொண்டிருந்த சமயம் அவ்விடத்துக்குப் படகில் வந்த கடற்படையினர் மீனவர்களை மீண்டும் சோதனைக்கு உட்படுத்தியதோடு படகுகளுடன் தீடைக்குக் கொண்டு செல்ல முற்பட்டனர்.

வேண்டுமானால் எம்மைக் 2

## 3.5 கிலோ ஹெரோயினுடன் இளைஞர் ஒருவர் சிக்கினார்

கொழும்பு - கிராண்ட்பாஸ் பகுதியில் ஹெரோயினுடன் நபர் ஒருவர் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

27 வயதுடைய இளைஞரே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளார் என்று பொலிஸ் ஊடகப்பிரிவு தெரிவித்துள்ளது.

குறித்த நபரிடம் இருந்து 3.5 கிலோகிராம் ஹெரோயின் கைப்பற்றப்பட்டுள்ளது எனத் தெரிவிக்கப்படுகின்றது.

## அமைச்சுப் பதவி அழைப்பை .........

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

எனினும், ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ பதவி விலகும்வரை, இது சாத்தியப்படாது எனவும், இளைஞர்களின் தன்னெழுச்சிப் போராட்டத்தைத் தான் மதிக்கிறேன் எனவும் ராஜித சேனாரத்தன எம்.பி., சம்பந்தப்பட்ட தரப்புகளுக்கு தெளிவுபடுத்தியுள்ளார்.

இதேவேளை, சஜித் பிரேமதாஸ தலைமையில் நடைபெற்ற ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்றக்குழுக் கூட்டத்தில் இம்முறை ராஜித சேனாரத்ன கடும் தொனியிலேயே கருத்துக்களை வெளியிட்டுள்ளார்.

ஒழுக்காற்று நடவடிக்கை என்பது நகைச்சுவையாக மாறியுள்ளது. டயானா கமகேவுக்கு எதிராக எடுக்கப்பட்ட நடவடிக்கை என்ன? அவர் பிரிட்டன் பிரஜை. இதை நிரூபித்தால் எம்.பி. பதவியைக் கூடப் பறித்துவிடலாம். ஆனால், இதனை கட்சி செய்யவில்லை. அதனால்தான் டயானா கமகே, எல்லா விடயங்களிலும் கட்சியை விமர்சித்து வருகின்றார். ஹரின், மனுஷ ஆகியோருக்கு எதிராக நடவடிக்கை எடுப்பதற்கு முன்னர், டயானா விவகாரத்தை முடிவுக்குக் கொண்டுவர வேண்டும் என்று ராஜித இடித்துரைத்துள்ளார்.

## “கோட்டா காஸ் ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

சமையல் எரிவாயு சிலிண்டர்களை அடுக்கி வைத்து, பதாகைகளைத் தாங்கியும், கோஷங்களை எழுப்பியும் மக்கள் போராட்டத்தை முன்னெடுத்தனர்.

இதனால் அவ்வீதி ஊடான போக்குவரத்து முற்றாக ஸ்தம்பிதமடைந்தது. ஹற்றனில் இருந்து சாஞ்சிமலை, பொகவந்தலாவை உள்ளிட்ட பகுதிகளுக்கு செல்வதற்கு வந்த மக்கள் நீண்ட நேரம் வாகனங்களில் காத்திருந்தனர். பலர் மாற்று வழிகளைத் தேடி திரும்பி சென்றனர். பொலிஸாரும் குவிக்கப்பட்டிருந்தனர்.

எங்களுக்கு கடந்த ஐந்து மாதங்களாக சமையல் எரிவாயு விநியோகிக்கப்படவில்லை. மண்ணெண்ணெய்யும் பகிரப்படவில்லை. நகரப்பகுதி என்பதால் விறகடுப்பு பயன்படுத்துவதிலும் ஆயிரம் தடைகள். இந்நகரில் லிட்ரோ சமையல் எரிவாயு முகவர்கள் மூவர் இருக்கின்றனர். அவர்களுக்கு குறித்த நிறுவனத்தால் எரிவாயு சிலிண்டர்கள் விநியோகிக்கப்படவில்லை. இதனால் நாம் எல்லா வழிகளிலும் துன்பப்படுகின்றோம். எனவே, சமையல் எரிவாயுவை விரைவில் வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் என்று போராட்டத்தில் பங்கேற்றவர்கள் தெரிவித்தனர்.

அத்துடன், சமையல் எரிவாயுவைக்கூட விநியோகிக்க முடியாமல் திண்டாடும் அரசுக்கு எதிராகவும் கோஷங்களை எழுப்பினர். எரிவாயு வழங்குவதற்கான கூப்பன் தமக்கு வழங்கப்படாமைக்கும் எதிர்ப்பைப் பதிவு செய்தனர்.

நிலைமையைக் கட்டுப்படுத்துவதற்கு நோர்வூட் பொலிஸார் முற்பட்டனர். எதிர்வரும் 8ஆம் திகதிக்குப் பின்னர் சமையல் எரிவாயுவைப் பெற்றுக்கொடுக்க நடவடிக்கை எடுக்கப்படும் என உறுதியளித்தனர். இதையடுத்துப் போராட்டம் கைவிடப்பட்டது. போக்குவரத்து நடவடிக்கையும் வழமைக்குத் திரும்பியது.

## பயணப் பைகளின் ......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

உள்நாட்டு உற்பத்தி தட்டுப்பாடு மற்றும் கடந்த சில மாதங்களாக நிலவும் இறக்குமதி கட்டுப்பாடு என்பன இதற்குக் காரணமாகும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

உள்நாட்டு பைகள் உற்பத்திக்கான மூலப்பொருள்கள் பற்றாக்குறை மற்றும் அவற்றின் விலைகள் அதிகரித்தமையும் இந்த விலை அதிகரிப்புக்கு காரணமாகும் என உள்ளளூர் பைகள் உற்பத்தியாளர்கள் தெரிவிக்கின்றனர்.

## மன்னாரில் கடற்படை .....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கடற்படை முகாமுக்குக் கொண்டு செல்லுங்கள். எதற்கு யாருமே அற்ற தீடைக்குக் கொண்டு செல்கின்றீர்கள்? என மீனவர்கள் கேள்வி எழுப்பியபோதும் அதற்குச் செவிசாய்க்க மறுத்த கடற்படையினர் மீனவர்களைத் தீடைக்குக் கொண்டு சென்றனர்.

தீடையில் இறக்கிய மீனவர்களை மீண்டும் சோதனை செய்ததோடு உடல் பரிசோதனைகளையும் மேற்கொண்ட சமயம் பேசாலையில் முரண்பாடு ஏற்பட்டபோது பிடிக்கப்பட்ட வீடியோப் படத்தின் மூலம் மீனவர்களை இனங்கண்டு ஆறு மீனவ்கள் மீது தாக்குதல் நடத்தப்பட்டது எனப் பாதிக்கப்பட்ட மீனவர்கள் குற்றஞ்சாட்டினர்.

தீடையில் தாக்கப்பட்ட 6 மீனவர்களும் ஏனைய மீனவர்களின் உதவியுடன் பேசாலை வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டனர்.

இந்த விடயம் தொடர்பாக மீனவர் சங்கங்கள், பங்குத் தந்தை ஆகியோர் கடற்படையின் உயர் அதிகாரியின் கவனத்துக்குக் கொண்டு சென்றபோதும் தீர்வு கிட்டவில்லை.

## தமிழர்களுக்கு .......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அனைவரும் ஒன்றிணைந்து செயற்பட வேண்டும் என அழைப்புவிடுக்கப் படும் இந்தச் சூழ்நிலையில் தமிழ் மக்களுக்கான அரசியல் தீர்வு பற்றியும் கவனம் செலுத்துவது அவசியம் என்றும் அவர் குறிப்பிட்டார்.

கடந்த 74 ஆண்டுகளாக தமிழ் மக்கள் விடுக்கும் வேண்டுகோள் அதிகார பகிர்வின் மூலம் தேசிய பிரச்சினைக்கு தீர்வு காண வேண்டும் என்பதே. அதனை புதிய அரசமைப்பின் மூலம் தீர்க்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் அவர் கேட்டுக்கொண்டார்.

அதேவேளை அரசு, அரசமைப்பு திருத்தம் ஒன்றைக் கொண்டுவருவதற்கு நடவடிக்கை எடுத்து வரும் நிலையில் அது பழைய அரசமைப்பில் புதிதாக ‘பெச்’ போடுவதாகவோ அல்லது ‘டிங்கரிங்’ செய்வதாகவோ இருக்கக்கூடாது. அரசமைப்பு திருத்தம் அன்றி முழுமையான புதிய அரசமைப்பு ஒன்றே அவசியமாகின்றது என்றும் அவர் தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் கூறுகையில்,

தமிழ் மக்களின் பிரச்சினைகள் நீண்ட காலமாக தேசிய பிரச்சினையாக உருவெடுத்துள்ளன. புதிய அரசமைப்பின் மூலம் அதற்குத் தீர்வு பெற்றுக்கொடுப்பது அவசியம்.

போர் முடிவடைந்தவுடன் தமிழ் மக்களின் பிரச்சினையும் முடிவடைந்துவிட்டது என்று நினைத்தால் அது தவறு.

1956ஆம் ஆண்டு முதல் தமிழ் மக்கள் ஜனநாயக முறையில் விடுத்து வரும் வேண்டுகோளுக்கும் அவர்களது எதிர்பார்ப்புகளுக்கும் அரசமைப்பின் மூலம் தீர்வு பெற்றுக்கொடுக்கப்பட வேண்டும். அதிகாரப் பகிர்வே அவர்களின் எதிர்பார்ப்பாக உள்ளது. பெரும்பான்மையானவர்கள் அதனை விரும்பவில்லை எனக் கூறிக்கொண்டு தொடர்ந்தும் அதனைக் தட்டிக் கழிக்க முடியாது.

தமிழ் மக்கள் நாம் சிறுபான்மையாக இருக்கலாம். ஆனால், எமது வேண்டுகோள் நிறைவேற்றப்பட வேண்டும். அது தொடர்பில் பேச்சுகளை நடத்துவதற்கும் இது மிகவும் பொருத்தமான காலமாக உள்ளது.

காலிமுகத்திடலில் யாழ்ப்பாண நூலகம் எரிக்கப்பட்ட தின நினைவு நிகழ்வும், போரில் உயிரிழந்த மக்களின் நினைவேந்தல் நிகழ்வும் கூட நடத்தப்படுகின்றது. அதற்காக வருத்தம் தெரிவிக்கப்பட்டு முதல் தடவையாக இவ்வாறு நிகழ்வுகள் நடத்தப்படுகின்றன. இது மிகவும் சிறந்த விடயமாகும்.

போரில் மரணமடைந்த தமிழ் மக்களைப் போன்று போரால் மரணமடைந்த இராணுவத்தினர் தொடர்பிலும் தமிழ் மக்களாகிய நாம் எமது வருத்தத்தைத் தெரிவித்துக் கொள்கின்றோம். இவ்வாறான ஒரு நிலைக்கு நாம் வந்துள்ளோம் என்பது மகிழ்ச்சியளிக்கின்றது.

இந்த அடிப்படையிலேயே சுமார் எழுபத்தி நான்கு ஆண்டுகள் தொடரும் தேசிய பிரச்சினைக்கு தீர்வு காண முடியும். நாம் ஒன்றிணைய வேண்டும், ஒன்றாக செயற்பட வேண்டும் என்றெல்லாம் நாடு வீழ்ச்சியடைந்துள்ள இந்த நிலையிலேயே நாம் சிந்திக்கின்றோம். இந்தச் சந்தர்ப்பத்தை நாம் அதற்காகப் பயன்படுத்துவது சிறந்தது என நான் நினைக்கின்றேன்.

நாடு பெரும் அரசியல் மற்றும் பொருளாதார நெருக்கடியைச் சந்தித்துள்ள காலம் இது. இதற்கு முழுமையான தீர்வு காண வேண்டுமானால் ஆர்ப்பாட்டக்காரர்கள் கூறுவதுபோல ‘சிஸ்டம் சேஞ்ச்’ ஒன்று அவசியம். அதற்கான நடவடிக்கைகள் விரைவுபடுத்தப்பட வேண்டும் அது மேலும் காலதாமதமாகும் போது நெருக்கடிகளே அதிகரிக்கும். - என்றார்.

## அம்பாறையில் 3,000 .....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வைத்திருந்த 3 ஆயிரம் ஆயிரம் லீற்றர் டீசலே இவ்வாறு கைப்பற்றப்பட்டது.

கைப்பற்றப்பட்ட டீசல் பொலிஸ் நிலையத்துக்குக் கொண்டுவரப்பட்ட நிலையில் கைதுசெய்யப்பட்டவரை நீதிமன்றில் ஆஜர்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என அக்கரைப்பற்றுப் பொலிஸார் தெரிவித்தனர்.

## தெற்கில் தொடரும் .....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

சம்பவம் இடம்பெற்றுள்ளது.

இந்தச் சம்பவத்தில் ஒருவர் உயிரிழந்துள்ளார் என்று பொலிஸ் ஊடகப்பிரிவு தெரிவித்துள்ளது.

42 வயதுடைய நபரே இதன்போது பலியாகியுள்ளார்.

சம்பவம் தொடர்பில் இதுவரையில் எந்தவொரு சந்தேகநபரும் கைதுசெய்யப்படவில்லை.

பாணந்துறை - நிர்மலா மாவத்தையில் வைத்து ஒருவர் இன்று முற்பகல் சுட்டுப் படுகொலை செய்யப்பட்டுள்ளார்.

மோட்டார் சைக்கிளில் வந்த நபர் ஒருவர் மேற்கொண்ட துப்பாக்கிச்சூட்டில் அவர் உயிரிழந்துள்ளார்.

துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொண்ட நபர் மற்றும் உயிரிழந்த நபர் குறித்தும் இதுவரை எந்தவித தகவல்களும் கிடைக்கவில்லை எனப் பொலிஸார் தெரிவித்தனர்.

மேற்படி இரு சம்பவங்கள் தொடர்பிலும் பொலிஸார் தீவிர விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர்.

## பிரதமரின் உரை; ........

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

முதல்வார நாடாளுமன்ற அமர்வு 7ஆம் திகதி முற்பகல் 10 மணிக்கு, சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்தன தலைமையில் ஆரம்பமாகின்றது. இதன்போதே பிரதமரின் உரை இடம்பெறவுள்ளது.

பிரதமரின் இந்த உரை உட்பட நாட்டில் நிலவும் பிரச்சினைகள் சம்பந்தமாக நாடாளுமன்றத்தில் இரு நாள்கள் விவாதம் இடம்பெறவுள்ளது.

7 மற்றும் 8ஆம் திகதிகளில் இவ் விவாதத்தை நடத்துவதற்குத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

நாடாளுமன்ற நடவடிக்கைகள் சம்பந்தமான கூட்டம் சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்தன தலைமையில் நேற்று முற்பகல் நடைபெற்றது. இதன்போது இதற்கான இணக்கப்பாடு எட்டப்பட்டது.

இவ்வார நாடாளுமன்ற அமர்வின் போது குறைநிரப்பு பிரேரணை முன்வைக்கப்படும்.

எதிர்வரும் வெள்ளிக்கிழமை, மே - 9 சம்பவத்தின்போது கொல்லப்பட்ட ஆளுங்கட்சி நாடாளுமன்ற உறுப்பினர் அமரகீர்த்தி அத்துகோரளவுக்கு அனுதாபம் தெரிவிக்கும் பிரேரணை மீதான விவாதம் இடம்பெறும்.

விளம்பரத் தொடர்புகளுக்கு -
தொலைபேசி
இலக்கம்-
076 443 8622




**மணமகன் விபரம்**

**பிறந்த திகதி :** 10.06.1987
**ஜாதி:** V ஆண்
**மதம் :** இந்து
**கல்வி தகைமை :** Msc Engineer
**எதிர்பார்ப்பு :** கனடா அல்லது அவுஸ்திரேலியா மணமகள்

**பிறந்த திகதி :** 26.09.1990
**ஜாதி:** N ஆண்
**மதம் :**இந்து
**நட்சத்திரம் :** திருவோணம் 2 ல் செவ்வாய்
**கல்வி தகைமை :** Bsc தொழில் : அரச உத்தியோகத்தா
எதிர்பார்ப்பு : அழகான மணமகள்

**பிறந்த திகதி:** 11.08.1994
**ஜாதி:** P செவ்வாய் குற்றமுடையவர்
**எதிர்பார்ப்பு :** ஒரே குலத்தை சோந்த அழகிய மணமகள்

**பிறந்த திகதி:** 1981.04.25
**ஜாதி:** V ஆண்
**மதம் :** இந்து
**கல்வி தகைமை :** A/L
**தொழில்:** சொந்த தொழில்
**எதிர்பார்ப்பு :** ஜரோப்பிய நாட்டு இலங்கை தமிழ் பெண்

**மணமகன் விபரம்**

**பிறந்த திகதி :** 27.12. 1989
**மதம் :** இந்து
**ஜாதி :** V பெண் செவ்வாய் குற்றமுடையவர்
**கல்வி தகைமை :** MBA
**தொழில்:** கனடா பிரஜை
**எதிர்பார்ப்பு :** கனடா மணமகன்

**பிறந்த திகதி :** 3.11.1995
**மதம் :** இந்து
**ஜாதி :** V பெண்
**கல்வி தகைமை:** University
**எதிர்பார்ப்பு :** வெளிநாட்டு மணமகன்

**பிறந்த திகதி :** 01.01.1992
**மதம் :** இந்து .
**ஜாதி :** Pபெண்
**கல்வி தகைமை:** NCAT.
**எதிர்பார்ப்பு :** உள்ளூர் அரச சேவை மணமகன்

**பிறந்த திகதி :** 17.05.1998
**மதம் :** இந்து .
**ஜாதி ::**P பெண் செவ்வாய் குற்றமுடையவர்
**கல்வி தகைமை:** AL
**எதிர்பார்ப்பு :**உள்நாடு - வெளிநாட்டு மணமகன்

# நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: 30, கல்லூரி வீதி, யாழ்ப்பாணம் தொலைபேசி - 021 222 3000
மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com இணையம் - onlinekathir.com

## பேரினவாத மேலாதிக்கம்

நீதிமன்ற அவமதிப்பு குற்றச்சாட்டில் ஆறு வருடச் சிறைத் தண்டனை விதிக்கப்பட்ட பொதுபலசேனா வின் செயலாளர் வண கலகொட அத்தே ஞானசார தேரருக்கு மைத்திரிபால சிறிசேன ஜனாதிபதியாக இருந்த போது பொது மன்னிப்பு வழங்கி விடுதலை செய்தார். அந்த பொது மன்னிப்பும் இப்போது உயர் நீதிமன்றத்தில் சவாலுக்கு உட்படுத்தப்பட்டிருக்கின்றது.

வெளியே வந்த ஞானசாரர் பழையபடி தமது கைவரிசையைக் காட்டத் தொடங்கினார். சிங்கள, பௌத்த மேலாதிக்கத்தை நிலை நிறுத்துவதாக எண்ணிக்கொண்டு சிறுபான்மையினரின் மதங்கள், நலன்களை மிதிக்கத் தொடங்கினார்.

சிறுபான்மை இனத்தவர்களையும் அவர்களின் மத நம்பிக்கைகள், வழக்காறுகள் போன்றவற்றையும் பேணிப் பாதுகாப்பதற்காக விசேடமாக நிலை நிறுத்தப் பட்டிருக்கும் சட்டங்களை தகர்ப்பதன் மூலம், அந்த மதங்களை, அந்த இனங்களை ஒழித்துவிடலாம் எனப் பௌத்த, சிங்களப் பேரினவாத மேலாதிக்க நடவடிக்கையைத் தமது பிரசாரமாக முன்னெடுத்தார்.

அந்தப் பேரினவாத இலக்கை அடைவதற்காக 'ஒரே நாடு; ஒரே சட்டம்' என்ற பெயரில் ஒரு ஜனாதிபதி செயலணியை உருவாக்கி, அதன் தலைவராக அதே ஞானசார தேரரை நியமித்தார், அதே போன்ற பேரினவாத பௌத்த, சிங்கள மமதைச் சிந்தனையில் மூழ்கிக்கிடக்கும் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ.

அந்தச் செயலணியின் காலம் சில தினங்களுக்கு முன்னர் முடிவுற்ற போது, அதற்கு மேலும் மூன்று வார காலஅவகாசம் வழங்கி, அதனை நீடிக்கும் விசேட வர்த்தமானி உத்தரவையும் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ விடுத்திருந்தார்.

இந்த பொதுபலசேனாவின் சீத்துவத்தைப் பற்றி அமெரிக்காவே இப்போது பிரஸ்தாபித்திருக்கின்றது.

ஒவ்வொரு நாட்டிலும் மத சுதந்திர நிலையை விவரிக்கும் சர்வதேச மத சுதந்திரம் குறித்த 2021 இன் அறிக்கையை அமெரிக்கா வெளியிட்டுள்ளது. அதில் இந்த பொதுபலசேனா குறித்தும் அதனால் இலங்கையில் ஏற்பட்டுள்ள ஆபத்துகள் குறித்தும் அமெரிக்கா விவரித்து இருக்கின்றது.

பௌத்த, சிங்களப் பெரும்பான்மையினரின் மேலாதிக்கத்தை ஊக்குவிப்பதற்காக சிறுபான்மை யினர் மற்றும் அவர்களின் மதங்களை இழிவுபடுத்தும் நடவடிக்கைகளை பொதுபலசேனா அமைப்பு சமூக ஊடகங்கள் ஊடாக தொடர்ந்து முன்னெடுத்து வருகின்றது என்று அந்த அமெரிக்க அறிக்கை தெரிவிக்கின்றது

சிவில் சமூக அமைப்புகளின் கூற்றுப்படி, பொதுபல சேனா போன்ற பௌத்த தேசியவாதக் குழுக்களின் சமூக ஊடகப் பிரச்சாரங்கள் மதச் சிறுபான்மை யினரை – குறிப்பாக முஸ்லிம் சமூகத்தினரை –குறிவைத்து வன்முறைகளைத் தூண்டி வருவதாக அந்த அறிக்கை விவரிக்கின்றது.

இலங்கையில் சிறுபான்மையினர் மற்றும் அவர்களின் மதங்களுக்கு எதிராக பேரினவாதம் மேற்கொண்டிருக்கும் அடக்குமுறை நடவடிக்கைகள் பற்றிய விவரங்களையும் அந்த அமெரிக்க அறிக்கை வெளிப்படுத்தியுள்ளது.

பேரினவாத மேலாதிக்கச் செருக்கு இந்த நாட்டைக் குட்டிச் சுவராக்கி அழிக்காமல் விடாது என்றே தோன்றுகின்றது.

# ஆசிரியர் சங்க பிரதிநிதிகளுடன் கல்வி அமைச்சர் சுசில் பேச்சு

(க.கிருபாகரன்)

கல்வித் துறையில் தற்போது எதிர் நோக்கப்படும் பிரச்சினைகள் மற்றும் எதிர் கால நடவடிக்கைகள் தொடர்பாக கல்விய மைச்சர் சுசில் பிரேமஜயந்தவுக்கும் ஆசிரியர் சங்கத் தலைவர்களுக்குமிடையிலான சந்திப்பு கல்வியமைச்சில் புதன்கிழமை இடம்பெற்றதாக இலங்கை ஆசிரியர் சங்கத் தின் கிழக்கு மாகாண இணைப்பாளரும், மட் டக்களப்பு மாவட்டப் பொதுச் செயலாளரு மான பொன்னுத்துரை உதயரூபன் தெரி வித்தார்.

இந்தச் சந்திப்பில் ஆசிரியர் சங்கங்களைப் பிரதிநிதித்துவப்படுத்தி யல்வெல பன்னசேகர தேரர், ஜோசப் ஸ்டாலின், மஹிந்த ஜயசிங்க மற்றும் ஜகத் ஆனந்த ஆகியோர் கலந்து கொண்டனர்.

இதன்போது சம்பள அதிகரிப்பு தொடர் பான உபகுழுவின் பரிந்துரைகளை 6 மாதங் களுக்குள் நடைமுறைப்படுத்துவதற்கான உடன்படிக்கையை அமைச்சு ஏற்கனவே மீறியுள்ள நிலையில் அதனை விரைவில் நடைமுறைப்படுத்தல், சம்பள அதிகரிப்புக்கு மேலதிகமாக அதிபர் சேவையிலுள்ள சம்பள முரண்பாடுகள், அதிபர்கள் சேவையில் ஆசிரியர்களை உள்வாங்குவதால் ஏற்படும் சம்பள முரண்பாடுகள், திறன் மேம்பாட்டு பயிற்சி தொடர்பிலான பிரச்சினைகள் போன்ற அதிபர்கள் மற்றும் ஆசிரியர்களின் பிரச்சினைகள், 1999 ஆம் ஆண்டு நிய மனம் பெற்ற அதிபர்களின் பதவியுயர்வுப் பிரச்சினைகளைத் தீர்த்தல் தொடர்பில் கலந்துரையாடப்பட்டது.

அத்தோடு புதிய பாடசாலை தவணை ஜூன் 6 ஆம் திகதி ஆரம்பமாகவுள்ள நிலையில், மாணவர்கள் மற்றும் ஆசிரி- யர்களின் போக்குவரத்துப் பிரச்சினைகள் தீவிரமாகக் காணப்படுவதால் அதற்கான தீர்வுகள், பரீட்சை விடைத்தாள்களை மதிப்பீடு செய்வதற்கான கொடுப்பனவுகளை அதி கரித்தல் மற்றும் இதுவரை வழங்கப்படாத கொடுப்பனவுகளை உடன் வழங்குதல் தொடர்பாகவும் ஆலோசிக்கப்பட்டது.

இதற்குப் பதிலளித்த கல்வியமைச்சர் சுசில் பிரேமஜயந்த விரைவில் அமைச் சரவையில் இதற்கான பத்திரத்தைச் சமர்ப் பித்து, பணம் வழங்குவதற்கு உரிய நடவடிக்கை எடுப்பதாக உறுதியளித்துள்ளார்.

அத்தோடு இவ்வாண்டு ஆசிரியர் இடமாற் றங்கள் கட்டயமாக்கப்படும் என அமைச்சர் இதன்போது இணக்கம் தெரிவித்தார் எனவும் அவர் மேலும் குறிப்பிட்டார்.

# வவுனியாவில் இளைஞனைக் காணோம் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு!



வவுனியா குருமன்காட்டைச் சேர்ந்த கயேந்திரன் கிருத்திகன் என்ற இளைஞரை புதன்கிழமையிலிருந்து காணவில்லை என வவுனியா பொலிஸ் நிலையத்தில் முறைப் பாடு பதிவுசெய்யப்பட்டுள்ளது.

குருமன்காடு பகுதியைச் சேர்ந்த குறித்த இளைஞர் புதன்கிழமை அதிகாலை 4 மணி யளவில் தனது வீட்டில் இருந்து வெளியே சென்றுள்ளார்.

எனினும் நீண்ட நேரமாகியும் அவர் வீடு திரும்பவில்லை. இதனையடுத்து அவரது குடும்பத்தினர் வவுனியா பொலிஸ் நிலை யத்தில் முறைப்பாடு பதிவுசெய்துள்ளனர்.

அவர் தொடர்பான தகவல் தெரிந்தவர்கள் கீழ் உள்ள தொலைபேசி இலக்கங்களுக்கு அழைப்பை ஏற்படுத்தி தெரியப்படுத்துமாறு உறவினர்களால் கோரப்பட்டுள்ளது. தொலைபேசி இலக்கங்கள். 077 169 1244- 0779302469

# முகாமைத்துவ கற்கைகள், வணிகபீட புதுமுக மாணவர்கள் அறிமுக நிகழ்வு



யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் முகா மைத்துவக் கற்கைகள் வணிக பீடத்தில் 2020 - 2021 ஆம் கல்வி ஆண்டுக்குத் தெரிவு செய்யப்பட்ட புதுமுக மாணவர்களுக் கான திசைமுகப்படுத்தும் நிகழ்வு கடந்த புதன்கிழமை இடம்பெற்றது.

முகாமைத்துவ கற்கைகள் வணிக பீடாதி பதி பேராசிரியர் பா. நிமலதாசன் தலைமை யில் இடம்பெற்ற இந்த நிகழ்வில் சுமார் 520 மாணவர்கள் நிகழ்நிலையில் கலந்து கொண்டனர்.

பல்கலைக்கழகத் துணைவேந்தர் பேராசி ரியர் சி.சிறிசற்குணராஜா புதுமுக மாணவர் களை வரவேற்று, வாழ்த்துரை வழங்கினார். முகாமைத்துவ கற்கைகள் வணிக பீடத்தின் கணக்கியல், மனித வள முகாமைத்துவம், சந்தைப்படுத்தல், வணிகம், நிதி முகாமைத் துவம் மற்றும் சுற்றுலாவும் விருந்தோம்பலும் அலகு ஆகியவற்றின் தலைவர்கள் தத்தமது துறைகளின் கற்கை நெறிகள் பற்றி மாணவர் களுக்கு விளக்கமளித்ததுடன், பல்கலைக் கழகத்தின் நூலகர், நலச்சேவைகள் பணிப் பாளர், உதவிப் பதிவாளர், மாணவர் ஒழுக் காற்று உத்தியோகத்தர்கள் ஆகியோரும் கலந்து கொண்டு பல்கலைக்கழக நடை முறைகள் தொடர்பில் விளக்கமளித்தனர்.

காலைக்கதிர் Kalaikkathir மாலைப்பதிப்பு

வெள்ளிக்கிழமை 03.06.2022

# பிரிட்டன் ராணி இரண்டாம் எலிசபெத் பதவியேற்று 70 ஆண்டுகள் நிறைவு



இங்கிலாந்தின் ராணியாக இரண்டாம் எலிசபெத் முடி சூட்டப்பட்ட 70 ஆண்டு பவளவிழா வெகு விமர்சையாக கொண்டாடப்பட்டது. ராணி எலிசபெத் தங்கியுள்ள வின்ட்சர் கேஸ்ட்டில் மாளிகையில் நடந்த வண்ணமிகு நிகழ்ச்சியில் வாண்ட் வாத்தியம் முழங்க எலிசபெத்துக்கு வரவேற்பு அளிக்கப்பட்டது. பின்னர் அவர் வண்ண மின்விளக்கு அலங்காரங்களை தொடக்கி வைத்தார். இந்த நிகழ்ச்சியில் ராணி எலிசபெத்தின் பேரனான இளவரசர் வில்லியம் உள்ளிட்ட அரச குடும்பத்தைச் சேர்ந்த பலர் பங்கேற்று எலிசபெத்துக்கு வாழ்த்து தெரிவித்தனர். தொடர்ந்து, கண்கவர் விமான சாகச நிகழ்ச்சி நடைபெற்றது. பக்கிங்காம் அரண்மனையின் மேலே பறந்த ஜெட் விமானங்கள் வண்ணங்களை தூவி வானை வர்ண ஜாலமாக்கின.

இதுமட்டுமன்றி ஏராளமான விமானங்களின் சாகச நிகழ்ச்சிகளும் நடத்தப்பட்டன. இதனை பிரிட்டன் ராணி எலிசபெத் மட்டுமன்றி ஏராளமான மக்களும் ஆச்சரியத்துடன் கண்டு ரசித்தனர். இங்கிலாந்து அரச பரம்பரையில் தொடர்ந்து 70 ஆண்டு கால ராணியாக இருப்பவர் இரண்டாம் எலிசபெத் ஆவார். இதனை கொண்டாடும் விதமாக நான்கு நாள்கள் லண்டனில் பல்வேறு கலை நிகழ்ச்சிகளுக்கு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளன. 96 வயதாகும் எலிசபெத், மிக நீண்ட ஆண்டுகள் ராணியாக இருப்பவர் என்ற சாதனைக்கு சொந்தக்காரர் ஆவார்.

## உள்நாட்டுப் போர் வெடிக்கும் பாகிஸ்தானில் இம்ரான் கான் எச்சரிக்கை விடுத்தார்



அடுத்தாண்டு மார்ச்சுக்குள் பாகிஸ்தானில் பொதுத்தேர்தல் நடத்தப்படவில்லை என்றால், உள்நாட்டு போர் வெடிக்கும். நாடு மூன்றாக உடையும்,' என்று முன்னாள் பிரதமர் இம்ரான்கான் எச்சரித்துள்ளார்.

பாகிஸ்தான் முன்னாள் பிரதமர் இம்ரான் கானுக்கு எதிராக கடந்த ஏப்ரல் மாதம் நடந்த நம்பிக்கையில்லா பிரேரணை வெற்றி அடைந்ததால், பதவியில் இருந்து தூக்கி எறியப்பட்டார்.

முன்னாள் பிரதமர் நவாஸ் ஷெரீப்பின் சகோதரர் பொஸ் ஷெரீப், புதிய பிரதமராக பதவியேற்றார். தற்போது, பாகிஸ்தானில் விரைவாக தேர்தல் நடத்தும்படி இம்ரான் கான் போராட்டம் நடத்தி வருகிறார். இந்நிலையில், நேற்று அவர் அளித்த பேட்டியில் கூறியதாவது:

பாகிஸ்தானில் பிரதமருக்கு முழுமையான அதிகாரம் இல்லை. உண்மையான அதிகார மையம் வேறு இடத்தில் இருக்கிறது. அது எங்கு என்று அனைவருக்கும் தெரியும் (ராணுவம்). அதனால் தான், நான் பிரதமராக இருந்த போது முழுமையான அதிகாரம் என்னிடம் இல்லை. எனது கைகள் கட்டப்பட்டிருந்தன. ஒவ்வொரு விடயத்திலும் பல்வேறு தரப்பால் மிரட்டப்பட்டேன்.

ஆட்சியாளர்கள் அதிகார மையத்தை நம்பி இருக்க வேண்டியதாக உள்ளது. இதனால், எனது தலைமையிலான ஆட்சி மிகவும் பலவீனமாக இருந்தது. கூட்டணிக் கட்சிகளின் ஆதரவை நாட வேண்டியிருந்தது.

ரஷ்யா, சீனா, ஆப்கானிஸ்தான் தொடர்பாக சுதந்திரமான வெளியுறவுக் கொள்கை முடிவுகள் எடுத்தேன். அதன் காரணமாக எனது ஆட்சியை கவிழ்க்க, அமெரிக்கா தலைமையில் சதித்திட்டம் தீட்டப்பட்டது.

அதனால்தான் நம்பிக்கையில்லா பிரேரணை வாக்கெடுப்பில் தோல்வியடைய நேரிட்டது. பாகிஸ்தான் தனது அணு ஆயுத பலத்தை இழந்தால், 3 துண்டுகளாக உடையும். இந்த நேரத்தில் சரியான முடிவுகளை எடுக்கவில்லை என்றால் நாடு தற்கொலை செய்து கொள்ளும் முடிவை நோக்கி செல்லும். தங்களுக்கு அதிகாரத்தையும் அடித்தளத்தையும் அமைத்து கொடுத்த நாட்டையே அதிகார மையம் இன்று பலவீனமாக்கி உள்ளது. அடுத்தாண்டு மார்ச் மாதத்துக்குள் தேர்தலை நடத்த நீதிமன்றத்தை நாடி உள்ளோம். அரசியலமைப்பு, சட்ட ரீதியாக தேர்தலை அனுமதிக்கிறார்களா என்று பார்ப்போம். இல்லை என்றால், உள்நாட்டுப் போர் ஏற்படும் சூழல் உருவாகும் என்று இம்ரான் கான் கூறினார். பாகிஸ்தானில் தேர்தல் நடத்த வலியுறுத்தி இம்ரான் கான் கடந்த மாதம் 27ம் திகதி நடத்திய சுதந்திர பேரணியில் கலவரம் வெடித்தது.

இது தொடர்பாக அவர் மீது 14 வழக்குகள் பதிவு செய்யப்பட்டு உள்ளன. இந்த வழக்குகளில் முன் ஜாமீன் கோரி இம்ரான் தொடர்ந்த வழக்கை நேற்று விசாரித்த நீதிமன்றம், அவரை 3 வாரங்களுக்கு கைது செய்யக் கூடாது என பொலிஸாருக்கு தடை விதித்தது.

## 100 ஆவது நாளை எட்டியது ரஷ்யா – உக்ரைன் போர்



உக்ரைன் மீது ரஷ்யா நடத்தி வரும் தாக்குதல் 100வது நாளை எட்டியுள்ளது. இந்த தொடர் தாக்குதலில் தனது நாட்டின் 20% பகுதிகளில் ரஷ்யாவின் வசம் சென்றுவிட்டதாக உக்ரைன் அதிபர் விளாடிமிர் ஜெலன்ஸ்கி தெரிவித்துள்ளார். நேட்டோ கூட்டமைப்பில் சேருவதை தடுக்கும் விதமாக கடந்த பெப்ரவரி 24ம் திகதி முதல் உக்ரைன் மீது ரஷ்யா போர் தொடுத்து வருகிறது. தலைநகர் கீவ், கார்க்கிவ் போன்ற நகரங்களின் பெரும் பகுதியை ரஷ்ய பகுதிகளில் பிடித்துவிட்டன. குறிப்பாக மரியுபோல் நகரை முழுமையாக ரஷ்ய படைகள் தனது கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வந்து விட்டன. ரஷ்ய ராணுவத்தினர் சுமார் 15,000 பேர் கொல்லப்பட்டுவிட்டனர் என உக்ரைன் கூறி வருகிறது.

அதே நேரம் பொதுமக்கள் உட்பட பல ஆயிரம் பேரை ரஷ்ய ராணுவம் கொன்று குவித்துள்ளதாக குற்றச்சாட்டு எழுந்துள்ளது. அதனை மெய்ப்பிக்கும் விதமாக மரியுபோல் நகரில் சில நாள்களுக்கு முன்பு சடலங்களின் குவியல் கண்டுபிடிக்கப்பட்டது. தற்போது கிழக்கு டோன்பாஸ் நகரில் சில பகுதிகளை பிடிக்கும் முயற்சியில் ரஷ்ய படைகள் தீவிரம் காட்டி வருகின்றன. தாக்குதல் 100 நாள்களை கடந்துள்ள நிலையில், தங்கள் நாட்டின் 20% பகுதிகள் ரஷ்யாவின் வசம் சென்றுவிட்டன என உக்ரைன் அதிபர் ஜெலன்ஸ்கி கூறியுள்ளார். ரஷ்ய ராணு வத்தின் மீது எதிர்த்தாக்குதல் நடத்த சிறைக் கைதிகளையும் உக்ரைன் களம் இறங்கியுள்ளது. உக்ரைனின் பெரும்பாலான நகரங்களை ரஷ்ய கபளீகரம் செய்துவிட்டதாக இங்கிலாந்து ராணுவம் கூறியுள்ளது. உக்ரைனுக்கு தொடர்ந்து அமெரிக்கா ராணுவங்களை அனுப்பி வருவதால் இப்போதைக்கு இந்த சண்டை ஓயாது என்றே தெரிகிறது.

## அமெரிக்காவில் குழந்தைகளுக்கு பால் பவுடருக்கு பற்றாக்குறையாம்

அமெரிக்காவில் குழந்தைகளுக்கான பால் பவுடர் பற்றாக்குறை ஏற்பட்டுள்ளது. இது குறித்து தனது கவனத்துக்கு கொண்டு வரப்படவில்லை என்று அதிபர் பைடன் வேதனை தெரிவித்தார். அமெரிக்காவில் பிறக்கும் குழந்தைகளுக்கு பெரும்பாலும் புட்டிப்பால் தான் தரப்படுகிறது. தாய்ப்பால் கிடைப்பது மிகவும் அரிது.

இதன் காரணமாக, அமெரிக்காவில் புட்டிப்பால் தயாரிக்க பயன்படும் பால் பவுடருக்கு எப்போதும் தேவை அதிகமாக இருக்கும். ஆனால், கடந்த சில ஈதங்களாக இந்த புட்டிப்பால் பவுடருக்கு கடும் பற்றாக்குறை ஏற்பட்டு இருக்கிறது. உலகத்துக்கே படி அளிந்து கொண்டிருக்கும் அதிபர் பைடன், தனது நாட்டில் இதுபோன்ற சிறிய பிரச்சினையில் கோட்டை விட்டு இருப்பது பெரும் சர்ச்சையாகி இருக்கிறது. இப்படிப்பட்ட ஒரு குறை அமெரிக்காவில் ஏற்பட்டு இருக்கிறது என்ற விவரம், சமீபத்தில்தான் வெளிச்சத்துக்கு வந்துள்ளது.

அமெரிக்காவின் மிச்சிகன் மாகாணத்தில் உள்ள அபோட் ஊட்டச்சத்து நிறுவனம் தயாரித்த குழந்தைகளுக்கான பால் பவுடரை உட்கொண்ட 2 குழந்தைகள் உயிரிழந்தன. இதில் பற்றீரியா இருந்ததை அமெரிக்க உணவு மற்றும் மருந்து கட்டுப்பாட்டு ஆணையம் கண்டறிந்தது. இதையடுத்து, பாதுகாப்பு காரணங்களுக்காக இந்நிறுவனம் கடந்த பெப்ரவரி முதல் மூடப்பட்டது. இதை தொடர்ந்து, அமெரிக்காவில் குழந்தைகளுக்கு வழங்கும் பால் பவுடர் விநியோகம் பாதிக்கப்பட்டுள்ளது. மார்ச், ஏப்ரல் மாதங்களில் இதன் பாதிப்பு தெரியவில்லை என்றாலும், மே 2ம் வாரத்துக்கு பிறகு, தற்போது நிலைமை மோசமாகி உள்ளது. இதையடுத்து, இந்த விவகாரம் அதிபர் பைடனின் கவனத்துக்கு கொண்டு செல்லப்பட்டதாக வெள்ளை மாளிகை ஊடக செயலாளர் கரீன் ஜான் பியரி தெரிவித்துள்ளார்.

இதைத் தொடர்ந்து, தேசிய உணவு மற்றும் மருந்து கட்டுப்பாடு ஆணையம், இந்த பற்றாக்குறையை நிவர்த்தி செய்யும் நடவடிக்கையில் இறங்கியது. அதன் பரிந்துரைப்படி, குழந்தைகளுக்கான பால் பவுடர் லண்டன், ஆஸ்திரேலியாவில் இருந்து இறக்குமதி செய்யப்பட உள்ளது.

லண்டனில் இருந்து வரும் ஜூன் 9ம் திகதி முதல், 3 வாரங்களுக்கு 37 லட்சம் 250 மி.லீ. பால் பவுடர் போத்தல்களும் ஆஸ்திரேலியாவில் இருந்து 46 லட்சம் 250 மி.லீ. போத்தல்களும் இறக்குமதி செய்யப்பட உள்ளன. பற்றாக்குறை பற்றி கவனத்துக்கு கொண்டு வரப்பட்டதும், குழந்தைகள் பால் பவுடர் தயாரிக்கும் பிரபல நிறுவனங்களின் கூட்டத்துக்கு அதிபர் பைடன் ஏற்பாடு செய்தார்.

ஆனால், அந்த கூட்டத்தில் அபோட் ஊட்டச்சத்து நிறுவனம் பங்கேற்கவில்லை. கூட்டத்துக்குப் பிறகு பைடன் அளித்த பேட்டியில், ஏப்ரலுக்கு பிறகு பிரச்சினை தீவிரமடையும் என்று அதிகாரிகள் கூறியுள்ளனர்– என்றார்.

காலைக்கதிர் Kalaikkathir மாலைப்பதிப்பு



# தனது பிறந்தநாளை தனக்காக கொண்டாடாமல் ஏழைகளுக்காக கொண்டாடிய தலைவர் கலைஞர்



## முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் பெருமிதம்

தனது பிறந்தநாளை தனக்காக கொண்டாடாமல் ஏழைகளுக்காக கொண்டாடிய தலைவர்தான் கலைஞர் என்று முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் பெருமிதம் தெரிவித்துள்ளார். மறைந்த தி.மு.க. தலைவரும், முன்னாள் தமிழ்நாட்டு முதலமைச்சருமான கலைஞர் கருணாநிதியின் 99 வது பிறந்தநாள் இன்று தமிழகம் முழுவதும் தி.மு.க. தொண்டர்களால் விமர்சையாக கொண்டாடப்பட்டு வருகிறது. இந்நிலையில் தி.மு.க. மூத்த முன்னோடிகளுக்கு பொற்கிழிகள் வழங்கும் விழாவில் முதல்வர் மு.க.ஸ்டாலின் உரையாற்றினார். அப்போது பேசிய அவர், தமிழ்நாட்டில் அனைத்து மாவட்டங்களிலும் தி.மு.க. மூத்த முன்னோடிகளுக்கு பொற்கிழி வழங்கப்படும் என கூறினார்.

தமிழ்நாட்டில் கை ரிக்ஷா இல்லாததற்கு காரணம் கலைஞர்தான். சைக்கிள் ரிக்ஷாக்களை இலவசமாக வழங்கினார் கலைஞர். பிச்சைக்காரர்களுக்கு மறுவாழ்வு இல்லம் கொடுத்து அவர்களுக்கு நல்வாழ்வை தந்தார் கலைஞர். தனது பிறந்தநாளை தனக்காக கொண்டாடாமல் ஏழைகளுக்காக கொண்டாடிய தலைவர்தான் கலைஞர் என்று பெருமிதம் தெரிவித்தார். நான்தான் முதல்வர் என கூறிக்கொண்டு இன்றைக்கு கட்சி தொடங்குகிறார்கள். மக்களுக்கு பணியாற்றவே 1949இல் தி.மு.க. தொடங்கப்பட்டது.

கட்சி தொடங்கும்போதே முதலமைச்சர் ஆவோம் என கூறிவிட்டு கட்சி தொடங்கவில்லை. கட்சி தொடங்கி 8 ஆண்டுகள் எந்த தேர்தல்களையும் சந்திக்காமல் இருந்தோம். 1957ல் 15 எம்.எல்.ஏக்களுடன் சட்டப்பேரவையில் நுழைந்தோம். 1962ம் ஆண்டு எதிர்க்கட்சியானது தி.மு.க. பல சோதனைகளை தாண்டி வந்த இயக்கம்தான் தி.மு.க. எவ்வளவு சோதனைகள் வந்தாலும் எதிர்கொள்ளும் வல்லமை பெற்ற இயக்கம் தி.மு.க.என்று முதலமைச்சர் குறிப்பிட்டார்.

## நஷனல் ஹெரால்டு நிதி முறைகேடு வழக்கு

# ராகுல் காந்தி வரும் 13ஆம் திகதி ஆஜராக அமுலாக்கத்துறை சம்மன்



நஷனல் ஹெரால்டு நிதி முறைகேடு தொடர்பான வழக்கில் ராகுல் காந்தி வரும் 13ம் திகதி விசாரணைக்கு நேரில் ஆஜராக அமுலாக்கத்துறை சம்மன் அனுப்பியுள்ளது. கடந்த 1938ம் ஆண்டு ஜவஹர்லால் நேரு மற்றும் 5,000 சுதந்திரப் போராட்ட வீரர்களால் தொடங்கப்பட்டது "நஷனல் ஹெரால்டு' பத்திரிகை நிறுவனம். சுதந்திரத்திற்கு பிறகு இந்நிறுவனம் காங்கிரஸின் குரலாக ஒலித்து வந்த நிலையில், கடந்த 2008ம் ஆண்டு 90 கோடிக்கும் மேலான கடன் சுமையால் மூடப்பட்டது. இந்நிலையில், நஷனல் ஹெரால்டு நிறுவனத்தை சோனியா காந்தி, ராகுல் காந்தி தொடங்கிய "யங் இந்தியா லிமிடெட்" என்ற நிறுவனம் 2010ம் ஆண்டு கையகப்படுத்தியது. இதில், நஷனல் ஹெரால்டு நிறுவனத்தின் 1,057 பங்குதாரர்களுடன் ஆலோசிக்காமல், நஷனல் ஹெரால்டு நிறுவனத்தை, 50 லட்சம் ரூபாவுக்கு தொடங்கிய 'யங் இந்தியா' நிறுவனத்துடன் மாற்றியதில் முறைகேடாக 2,000 கோடி ரூபா வரை ஆதாயம் அடைந்துள்ளதாக கூறி பா.ஜ.க. மூத்த தலைவர் சுப்பிரமணிய சுவாமி டெல்லி உயர் நீதிமன்றத்தில் வழக்கு ஒன்றை தொடர்ந்தார்.

இந்நிலையில், பணம் மோசடி மற்றும் சட்ட விரோத பண பரிவர்த்தனையின் கீழ் 2014ம் ஆண்டு அமுலாக்கத்துறை வழக்கு பதிவு செய்தது. 2015ம் ஆண்டு முதல் விசாரணை நடைபெற்று வரும் வழக்கில் 2015ம் ஆண்டு டிசெம்பர் மாதம் உச்சநீதிமன்றம் சோனியா காந்தி மற்றும் ராகுல் காந்தி இருவருக்கும் முன்ஜாமீன் வழங்கியது. மேலும், இதே வழக்கில் 2016ம் ஆண்டு சோனியா காந்தி, ராகுல் காந்தி, மோதிலால் வோரா, சுமந்த் துபே, ஆஸ்கர் பெர்னாண்டஸ் ஆகியோர் குற்றவியல் நீதிமன்றத்தில் விசாரணைக்கு நேரடியாக ஆஜராவதிலிருந்து விலக்கு அளித்தது. இவ் வழக்கில் இறுதியாக அமுலாக்கத்துறை காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்த மல்லிகார்ஜுனா கார்கேவுக்கு கடந்த 2021ம் ஆண்டு நோட்டீஸ் வழங்கி விசாரணை நடத்தியது. இந்நிலையில் மேற்கொண்டு வழக்கு விசாரணை நடத்துவதற்காக காங்கிரஸ் கட்சியின் மூத்த தலைவர்கள் சோனியா காந்தி, ராகுல் காந்தி இருவருக்கும் டெல்லி அமுலாக்க துறை, சம்மன் அனுப்பியது. ராகுல் காந்தி ஜூன் 2ம் திகதியும் சோனியா காந்தி ஜூன் 8ம் திகதியும் நேரில் ஆஜராகுமாறு அமுலாக்கத்துறை சம்மன் அனுப்பியது.

ஆனால், வெளிநாட்டில் பயணம் மேற்கொண்டு இருப்பதால் ராகுல் நேற்று விசாரணைக்கு ஆஜராகவில்லை. 5ம் திகதிக்குப் பிறகு ஏதாவது ஒரு திகதியில் விசாரணை நடத்தும்படி அமுலாக்கத் துறைக்கு அவர் கடிதம் எழுதி இருக்கிறார். இந்த நிலையில் ராகுலின் கோரிக்கையை ஏற்ற அமுலாக்கத்துறை, நஷனல் ஹெரால்டு வழக்கில் வரும் ஜூன் 13ம் திகதி ஆஜராக ராகுல் காந்திக்கு சம்மன் அனுப்பியது. இதனிடையே சோனியா காந்திக்கு கொரோனா தொற்று ஏற்பட்டுள்ளதை அடுத்து அவர் தனிமைப்படுத்திக் கொண்டார். இதனால் ஜூன் 8ம் திகதி அவர் ஆஜராகுவாறா மாட்டாரா என்ற கேள்வி எழுந்துள்ளது. 2024 மக்களவைத் தேர்தல் மற்றும் அதற்கு முன்னதாக பல்வேறு மாநிலங்களில் சட்டமன்ற தேர்தல் நடைபெற உள்ள நிலையில், காங்கிரஸ் கட்சியின் மூத்த தலைவர்களுக்கு அழுத்தம் கொடுக்க கூடிய வகையில் மத்திய புலனாய்வு அமைப்புகள் பழைய வழக்குகளின் விசாரணைகளை மீண்டும் விசாரிக்க தொடங்கி இருப்பதாக காங்கிரஸ் கட்சி குற்றம் சாட்டியுள்ளது.



## சம்பாவத் தொகுதி தேர்தலில் வெற்றி

# உத்தராகண்ட் முதலமைச்சர் பதவியை தக்கவைத்துக் கொண்டார் புஷ்கர் சிங் தாமி

சம்பாவத் சட்டப்பேரவை தொகுதி இடைத் தேர்தலில் உத்தராகண்ட் முதல்வர் புஷ்கர் சிங் தாமி வெற்றி பெற்றார். உத்தரகாண்ட் மாநிலத்தில் நடந்து முடிந்த சட்டமன்ற தேர்தலில் பா.ஜ.க. வெற்றி பெற்று ஆட்சியை கைப்பற்றியது. ஆனால், காதிமா தொகுதியில் போட்டியிட்ட முதல்வர் வேட்பாளரான புஷ்கர் சிங் தாமி தோல்வியடைந்தார். எனினும் தாமி சட்டமன்றத் தலைவராக தேர்வு செய்யப்பட்டு முதல்வர் பொறுப்பேற்றார். ஆறு மாதங்களுக்குள் அவர் சட்டமன்ற உறுப்பினராக தேர்ந்தெடுக்கப்பட வேண்டும் என்பதால் அவர் போட்டியிடுவதற்கு ஏதுவாக ஏப்ரல் 21ம் திகதி சம்பவாத் தொகுதி பா.ஜ.க. எம்.எல்.ஏ. கைலாஷ் எம்.எல்.ஏ பதவியை ராஜினாமா செய்தார்.

இதனைத் தொடர்ந்து சம்பவாத் தொகுதியில் கடந்த மே 31ம் திகதி இடைத்தேர்தல் நடைபெற்றது. இந்த தேர்தலில் வெற்றி பெற்றால் மட்டுமே புஷ்கர் சிங் தாமி தொடர்ந்து முதல்வராக நீடிக்க முடியும் என்ற கேள்விக்குறி எழுந்தது. முதல்வா புஷ்கா சிங் தாமி, காங்கிரஸ் சார்பில் கட்சியின் மாவட்ட முன்னாள் தலைவர் நிர்மலா கெடோரி, சமாஜவாதி சார்பில் மனோஜ் குமார் பட், சுயேச்சை வேட்பாளர் ஹிமான்ஷு கட்கோடி ஆகியோர் தேர்தலில் போட்டியிட்டனர். தேர்தல் களத்தில் 4 போ இருந்தாலும் பா.ஜ.க.,காங்கிரஸ் இடையே தான் நேரடி போட்டி நிலவியது.

இந்த நிலையில் மே 31ம் திகதி சம்பவாத் தொகுதியில் பதிவான வாக்குகள் எண்ணப்பட்டு முடிவுகள் இன்று அறிவிக்கப்பட்டன. அதன்படி சம்பாவத் தொகுதியில் 55 ஆயிரம் வாக்குகள் வித்தியாசத்தில் புஷ்கர் சிங் வெற்றி பெற்றார்.

காங்கிரஸ் சார்பில் கட்சியின் மாவட்ட முன்னாள் தலைவா நிர்மலா கெடோரியை விட கூடுதலாக 55 ஆயிரம் வாக்குகள் பெற்று புஷ்கர் சிங் முதலமைச்சர் பதவியை தக்கவைத்துக் கொண்டார்.

# கலைஞர் எழுதுகோல் விருது பத்திரிகையாளர் சண்முகநாதனுக்கு

2021ம் ஆண்டுக்கான கலைஞர் எழுதுகோல் விருது, மூத்த பத்திரிகையாளர் ஐ.சண்முகநாதனுக்கு வழங்கப்பட்டது. தலைமைச் செயலகத்தில் இளைஞர் துறையில் சமூக மேம்பாட்டிற்காக பங்காற்றி வரும் சிறந்த இதழாளருக்கு ஆண்டுதோறும் கலைஞர் எழுதுகோல் விருது மற்றும் 5 லட்சம் ரூபா பரிசு தொகையுடன் பாராட்டுச் சான்றிதழும் வழங்கப்படும் என அறிவிக்கப்பட்டிருக்கிறது.

அதன்படி, 2021ம் ஆண்டிற்கான கலைஞர் எழுதுகோல் விருதினை பெறுவதற்காக பத்திரிகையாளர் ஐ.சண்முகநாதன் தேர்வு செய்யப்பட்டார்.

இந்நிலையில், சென்னையில் தலைமைச் செயலகத்தில் நடந்த நிகழ்ச்சியில் ஐ. சண்முகநாதனுக்கு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் விருதினை வழங்கி கௌரவித்தார்.

ஐ.சண்முகநாதனுக்கு கலைஞர் எழுதுகோல் விருதுடன் ரூ.5 லட்சம் பரிசுத் தொகையையும் முதலமைச்சர் வழங்கினார். 1953ம் ஆண்டு முதல் இதுநாள்வரை ஏறத்தாழ 70 ஆண்டுகளாக பத்திரிகை துறையில் ஐ.சண்முகநாதன் பணியாற்றி வருகிறார் என்பது குறிப்பிடத்தக்கது.

தொடர்ந்து தமிழறிஞர்களுக்கு வீட்டுமனை ஒதுக்கீடு ஆணைகளை முதலமைச்சர் வழங்கினார்.




இதற்கு முன்னதாக சென்னை அண்ணா அறிவாலயத்தில் கலைஞரின் திருவுருவ சிலைக்கு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் மாலை அணிவித்து மரியாதை செலுத்தினார்.

அதன்பின் முரசொலி அலு வலகத்தில் வைக்கப்பட்டுள்ள கலைஞரின் படத்திற்கு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் மரியாதை செலுத்தினார்.

# மட்டக்களப்பு ஆஸ்பத்திரிகளுக்கு 18 வைத்திய அதிகாரிகள் நியமனம்





மட்டக்களப்பு மாவட்டத்திலுள்ள பல்வேறு வைத்தியசாலைகளுக்கு 18 வைத்திய அதிகாரிகள் நியமனம் பெற்றுள்ளனர். அவர்கள் மட்டக்களப்பு பிராந்திய சுகாதார பணிமனையில் கடமையைப் பொறுப்பேற்றுக் கொண்டுள்ளனர்.

மட்டக்களப்பு பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் டாக்டர் குணசிங்கம் சுகுணன் தலைமையில் சுகாதார பணிமனையில் இடம்பெற்ற நிகழ்வின்போது வைத்தியர்கள் தமது கடமைகளை பெறுப்பேற்றுள்ளனர்.

நீண்ட காலமாக ஆளணியற்று காணப்பட்ட வாகரை சுகாதார வைத்திய அதிகாரி பணிமனை, மாங்கேணி வைத்தியசாலை, மீராவோடை வைத்தியசாலை, காங்கேயனோடை வைத்தியசாலை, திக்கோடை வைத்தியசாலை, களுவாஞ்சிகுடி, காத்தான்குடி, வாழைச்சேனை ஆதார வைத்தியசாலைகளுக்கே புதிதாக கடமையேற்ற வைத்தியர்கள் நியமிக்கப்பட்டுள்ளார்கள்.

மட்டக்களப்பு மாவட்டத்திற்கான சுகாதார சேவையினை தம்மால் முடிந்தவரை மேம்படுத்த திடசங்கற்பம் கொண்டு தடைகளை உடைத்தபடி பிராந்திய சுகாதார சேவைகள் பணிமனை முன்நோக்கி செல்லும் என மட்டக்களப்பு பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் டாக்டர் குணசிங்கம் சுகுணன் இந்நிகழ்வை ஒட்டிய தனது தலைமையுரையில் குறிப்பிட்டார்.

## கிழக்கின் புதிய டி.ஐ.ஜி. நேற்றுப் பதவியேற்றார்



கிழக்கு மாகாணத்தின் புதிய சிரேஷ்ட பிரதிப் பொலிஸ்மா அதிபராக நியமனம் பெற்ற ராஜித சிறி தமிந்த தமது பதவிப் பொறுப்பை ஏற்றுக் கொண்டார்.

நேற்றுக் காலை மட்டக்களப்பிலுள்ள கிழக்கு மாகாண சிரேஷ்ட பிரதிப் பொலிஸ்மா அதிபர் பணிமனையில் இந் நிகழ்வு இடம்பெற்றது.

இந்நிகழ்வில், மட்டக்களப்பு, அம்பாறை, திருகோணமலை, கந்தளாய் பிராந்தியங்களுக்குப் பொறுப்பான சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர்கள் உட்பட மாகாண உயர் பொலிஸ் அதிகாரிகள் மற்றும் சர்வமதத் தலைவர்களும் கலந்து கொண் டனர். அதனைத் தொடர்ந்து, பொலிஸாரின் அணி வகுப்பு மரியாதையையும் புதிய சிரேஷ்ட பிரதிப் பொலிஸ்மா அதிபர் ஏற்றுக் கொண்டார்.

இவர் முன்னர் தென்மாகாணத்தில் கடமையாற்றியவர் என்பது குறிப்பிடத்தக்கது.

## மட்டக்களப்பு இராமகிருஷ்ண மிஷனில் ஆசிரியர்களுக்கு ஆன்மீகச் செயலமர்வு

(காரைதீவு நிருபர் சகா)





மட்டக்களப்பு கல்லடி இராமகிருஷ்ண மிஷனில் ஆசிரியர்களுக்கான ஆன்மீக பயிற்சி செயலமர்வு சில தினங்களுக்கு முன்னர் சிறப்பாக நடைபெற்றது.

இந்நிகழ்வில், ஆசிரியர்கள் மனதை எவ்வாறு தமது கட்டுக்குள் வைத்திருப்பது சம்பந்தமான விடயங்களையும், தியானம் செய்வதற்கான அடிப்படை நுட்பங்களையும் கல்லடி இராமகிருஷ்ண மிஷன் உதவி மேலாளர் சுவாமி ஸ்ரீமத் நீலமாதவானந்த ஜீ மஹாராஜ் பயிற்சியளித்தார்.

உடல் வலிமை மற்றும் தன்னம்பிக்கை வளர்த்தல் போன்ற கருத்துக்களையும் ஆசிரியர்கள் தொழில்நுட்பத்துடன் எவ்வாறு ஆன்மீகத்தையும் கடைப்பிடித்து முன்னேற முடியும் என்ற விடயங்களையும் பற்றி கல்லடி இராமகிருஷ்ண மிஷன் மேலாளர் சுவாமி ஸ்ரீமத் தக்ஷஜானந்தஜீ மஹ ராஜ் பயிற்சி அளித்தார்.

விரிவுரையாளர் கே.ஞானரெத்தினம் பங்கு பற்றி உரையாற்றினார்.

இந்திய சென்னையிலிருந்து இ.கி.மிஷன் சுவாமிகளின் காணொலி உரையும் இடம்பெற்றது.

மனப்பாங்கு மாற்றம், விதியை வெல்லும் வழி, ஆளுமைக்கான திறன்களை வளர்த்துக் கொள்ளுதல் மற்றும் தற்போதைய நிலையில் மாணவர்கள் பின்பற்றவேண்டிய வழிமுறைகள் என பல விடயங்களில் இலங்கை இராமகிருஷ்ண மிஷன் தலைவர் சுவாமி அக்ஷராத்மானந்தஜீ மஹராஜ் பயிற்சியளித்தார். இறுதியாக சிவானந்தா வித்தியாலய அதிபர் எஸ்.சுவர்ணேஸ்வரனின் நன்றி உரையுடன் மாணவர்களுக்கான இனிய மதியபோசனத்துடன் சிறப்புற இச் செயலமர்வு நிறைவேறியது. இராமகிருஷ்ண மிஷன் துறவிகள், சேவகர்கள், தொண்டர்கள், மாணவர்கள் எனப் பலரும் இந்நிகழ்வில் கலந்து கொண்டனர்.

# மகிழடித்தீவு ஆஸ்பத்திரியில் ஆரோக்கிய சுகவாழ்வு மையம்



மகிழடித்தீவு பிரதேச வைத்தியசாலையில் ஆறு கோடி ரூபா செலவில் அமைக்கப்பட்ட ஆரோக்கிய சுகவாழ்வு மையம் நேற்று முன்தினம் திறந்து வைக்கப்பட்டது.

கடந்தகால யுத்தத்தினால் மிகமோசமாகப் பாதிக்கப்பட்ட படுவான்கரைப் பிரதேசத்தில் பட்டிப்பளையும் முக்கியமானது.

அந்த அடிப்படையில் பாதிக்கப்பட்ட மக்களின் சுகாதார தேவையை ஏனைய மக்களுக்கு கிடைக்கும் சேவைக்கு சமன் செய்யும் முகமாக உலகவங்கியின் திட்டத்திற்குள் உள்வாங்கப்பட்டு அபிவிருத்தி செய்யப்பட்ட மகிழடித்தீவு வைத்தியசாலையில் நவீன ஆய்வுகூட, மருந்தகத்தைக் கொண்ட மூன்று மாடிக்கட்டடம் மட்டக்களப்பு பிராந்திய சுகாதார சேவைகள் பணிமனையால் மக்களின் பாவனைக்கு வழங்கிவைக்கப்பட்டது.

இந்நிகழ்வில் மட்டக்களப்பு மாவட்ட செயலாளர் க.கருணாகரன் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டார்.

கொக்கட்டிச்சோலையில் வாழ்கின்ற மக்களுக்கு ஒரு ஆதார வைத்தியசாலையில் சேவைகள் கிடைக்கக்கூடிய தரத்தில் இந்த வைத்தியசாலை தரமுயர்த்தப்பட்டுள்ளது.

இது பட்டிப்பளை மக்களின் வரப்பிரசாதமாக பலரின் உழைப்பில் உருவாக்கப்பட்டுள்ளதாக நிகழ்விற்கு தலைமை தாங்கிய பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் டாக்டர் குணசிங்கம் சுகுணன் தெரிவித்தார்.

# சர்வதேச நாணய நிதியத்திற்கு சென்றால் நாடு ஆபத்தான நிலைமைக்கு சென்றுவிடும்

## பிமல் எச்சரிக்கை

சர்வதேச நாணய நிதியத்துக்குச் சென்று, நாட்டை ஒருபோதும் மீட்டெடுக்க முடியாது என்று ஜே.வி.பியின் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் பிமல் ரத்நாயக்க தெரிவித்துள்ளார்.

மேலும், கிறீஸ் நாட்டுக்கு ஏற்பட்ட நிலைமை இலங்கைக்கும் ஏற்படக்கூடிய வாய்ப்புள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

ஜே.வி.பியின் கூட்டமொன்றில் கலந்து கொண்டு உரையாற்றிய அவர், “சர்வதேச நாணய நிதியத்திற்கு சென்று, மீண்டெழுந்த நாடுகள் உலகில் இல்லை.

1998 இல் இருந்து ஆர்ஜென்டீனா 9 தடவைகள் ஐ.எம்.எவ்விடம் கடன் பெற்றுள்ளது. இந்த 9 தடவைகளும் அந்நாடு கடுமையான நெருக்கடிகளுக்கு முகம் கொடுத்தது.

சர்வதேச நாணய நிதியத்திற்கு சென்று இலங்கை போன்ற சிறிய நாடுகளால் ஒருபோதும் மேலே வரமுடியாது.

கிறீஸ் எம்மை விட பல மடங்கு பெரிய நாடாகும். 13 வருடங்கள் ஐ.எம்.எவ்விற்கு சென்று, கடந்த வருடம் தான் அந்த நாட்டில் சிறியதொரு முன்னேற்றம் ஏற்பட்டது.

ஆனால், இந்தக் காலப்பகுதியில் நாட்டின் மின்சாரக் கட்டமைப்பு, நீர் சுத்திகரிப்பு நிறுவனங்கள், துறைமுகங்கள் என அனைத்தையும் கிறீஸ் விற்பனை செய்தது. இதேபோன்று தான் இலங்கையிலும் ஏற்படும். இப்போதுள்ள ஆட்சியாளர்கள் இன்னும் இருந்தால் தனிநபர் கடன் தொகை இன்னமும் உயரும். கிறீஸ் நாட்டைப் போன்று, நாட்டின் ஏனைய சொத்துக்களையும் விற்பனை செய்யும் நிலைமை ஏற்படும். தனிநபர் வருமானத்தை விட தனிநபர் கடன்தொகை இன்று அதிகரித்துள்ளது. கோட்டா–ரணில்– ஹறின் போன்றோரை வைத்து நாட்டில் எதையும் செய்ய முடி யாது. இவர்களால் மக்களை மீட்டெடுக்க முடியாது’. – எனத் தெரிவித்தார்.



# முன்னாள் அமைச்சர் ஒருவருடைய மதுபான தொழிந்சாலைகளுக்கு சீல்!

## விஷ இரசாயனக் கலப்படம் இருந்தமையால்

முன்னாள் அமைச்சர் ஒருவருக்கு சொந்தமான இரண்டு மதுபான தயாரிப்பு தொழிற்சாலைகள் தொடர்பாக மதுவரி திணைக்களம் விசாரணைகளை ஆரம்பித்துள்ளது.

இந்த தொழிற்சாலைகளில் தயாரிக்கப்படும் மதுபானங்கள் தரமற்றவை என கிடைத்த முறைப்பாடுகளின் அடிப்படையில் விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

மதுபானங்களுக்கு தரத்தை அறிமுகப்படுத்திய பின்னர் விற்பனை நிலையங்களில் கொள்வனவு செய்யப்பட்ட மதுபான மாதிரிகள் அரச பகுப்பாய்வு திணைக்களத்துக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளன.

அரச இரசாயன பகுப்பாய்வு திணைக்களத்திடம் கிடைத்த அறிக்கையை அடுத்து, மேற்படி மதுபான தயாரிப்பு தொழிற்சாலையில் தயாரிக்கப்படும் மதுபானங்களை விற்பனை செய்யத் தடை விதிக்கப்பட்டுள்ளது

களுத்துறை மற்றும் குருணாகல் மாவட்டங்களில் அமைந்துள்ள இந்த மதுபான தயாரிப்பு தொழிற்சாலைகள் கடந்த மே 9 ஆம் திகதி ஏற்பட்ட கலவரமான நிலைமையின் போது தீ வைக்கப்பட்டன.

அந்த சம்பவம் நடப்பதற்கு முன்னரே மதுபான தயாரிப்பு தொழிற்சாலைகளுக்கு சீல் வைக்கப்பட்டிருந்தது. மதுபான தொழிற்சாலையில் இருந்து சந்தைக்கு விநியோகிக்கப்பட்டுள்ள மதுபானங்களை திரும்ப பெறவும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

முன்னாள் அமைச்சருக்கு சொந்தமான இந்த மதுபான தயாரிப்பு தொழிற்சாலையில் தயாரிக்கப்படும் மதுபானங்களில் கிருமிகளை அழிக்க பயன்படுத்தப்படும் விஷ இரசாயனம் அடங்கி இருந்ததாக பரிசோதனைகளில் தெரியவந்துள்ளது.

இந்த தவறை சரி செய்த பின்னர், மீண்டும் மதுபான தயாரிப்புக்கு அனுமதி வழங்க மதுவரி திணைக்களம் நடவடிக்கை எடுத்து வருகிறது. எவ்வாறாயினும் தரமற்ற மதுபானங்களை உற்பத்தி செய்யும் நிறுவனங்களின் அனுமதிப்பத்திரங்களை ரத்துச் செய்ய வேண்டும் என மதுபான விற்பனை நிலையங்களின் உரிமையாளர்கள் சங்கம் கூறியுள்ளது. குருணாகல் மாவட்டத்தை பிரதிநிதித்துவப்படுத்தும் ஆளும் கட்சியின் முன்னாள் அமைச்சர் ஒருவர் பிரபல மதுபான தயாரிப்பு நிறுவனங்கள் மற்றும் விற்பனை நிலையங்களின் உரிமையாளர் என்பது குறிப்பிடத்தக்கது.

# சாதாரண தர பரீட்சை விடைத்தாள் திருத்தப் பணிகள் 17 முதல் ஆரம்பம்

கல்விப் பொதுத் தராதரப் பத்திர சாதாரண தரப் பரீட்சையின் விடைத்தாள் திருத்தப் பணிகள் எதிர்வரும் 17 ஆம் திகதி ஆரம்பமாகவுள்ளன. க.பொ.த. சாதாரண தரப் பரீட்சைகள் நிறைவடைந்த நிலையிலேயே இந்த அறிவிப்பு பரீட்சைகள் ஆணையாளர் நாயகம் எல்.எம்.டி. தர்மசேனவால் வெளியிடப்பட்டது. விடைத்தாள் திருத்தப் பணிகள் இரண்டு கட்டங்களாக இடம்பெறவுள்ளன எனவும் முதல் கட்டம் எதிர்வரும் 17ஆம் திகதியிலிருந்து 26 ஆம் திகதி வரை நடைபெறும் என்றும் அவர் தெரிவித்தார்.

மேலும், இரண்டாம் கட்டம் எதிர்வரும் 30 ஆம் திகதியிலிருந்து ஜூலை மாதம் 9ஆம் திகதி வரை இடம்பெறவுள்ளது.

விடைத்தாள் திருத்தப் பணியில் ஈடுபடவுள்ள ஆசிரியர்களைத் தெளிவூட்டும் கருத்தரங்கு எதிர்வரும் 5 ஆம் திகதியிலிருந்து 8 ஆம் திகதி வரை இரண்டு கட்டங்களாக இடம்பெறும் என்றும் பரீட்சைகள் ஆணையாளர் நாயகம் தெரிவித்தார்.

நாட்டில் தற்போது நிலவிவரும் சவால்களுக்கு மத்தியில் இம்முறை கல்விப் பொதுத் தராதரப் பத்திர சாதாரண தரப் பரீட்சைகள் வெற்றிகரமாக நடத்து முடிந்துள்ளன.

இந்த நிலையில், பரீட்சைகள் பற்றி சில முறைப்பாடுகள் மாத்திரமே கிடைக்கப்பெற்றன எனவும் இந்த முறைப்பாடுகள் பற்றிய விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டிருக்கின்றன எனவும் பரீட்சைகள் ஆணையாளர் நாயகம் எல்.எம்.டி.தர்மசேன மேலும் தெரிவித்துள்ளார்.

# கையிருப்பிலுள்ள எரிபொருள் விவரம்

இலங்கையில் தற்போது கிடைக்கப்பெறும் எரிபொருளின் கையிருப்பு தொடர்பான விவரத்தை எரிசக்தி அமைச்சு வெளியிட் டுள்ளது.

நேற்று (வியாழக்கிழமை) காலை 08.30 மணி முதல் அமுலுக்கு வரும் வகையில் எரிபொருள் கையிருப்பு தொடர்பில் அமைச்சர் காஞ்சன விஜேசேகர அறிக்கை ஒன்றை வெளியிட்டுள்ளார்

இதன்படி எரிபொருள் கையிருப்பு பின்வருமாறு:

டீசல் – 18,825 MT
சூப்பர் டீசல் – 42 MT
92 பெற்றோல் –33,498 MT
95 பெற்றோல் – 13,067 MT
JET A1 -386 MT

மேலும் டீசல் இறக்கும் பணி தற்போது நடைபெற்று வருவதாகவும் அமைச்சர் காஞ்சன விஜேசேகர குறிப்பிட்டுள்ளார் .

அத்துடன் எண்ணெய் சுத்திகரிப்பு நிலையமும் செயற்பாடுகளை ஆரம்பித்துள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார் .

# தமிழக நிவாரணப்பொருள்கள் ஹற்றனைச் சென்றடைந்தன

இலங்கையில் பொருளாதார நிதி நெருக்கடி காரணமாக பாதிக்கப்பட்ட மக்களுக்கு தமிழ்நாட்டு மக்கள் அத்தியாவசிய உணவுப் பொருள்களை அன்பளிப்பாக வழங்கியுள்ள நிலையில் குறித்த உலர் உணவுப் பொருள்கள் அனைத்து மாவட்ட மக்களுக்கும் பகிர்ந்தளிக்கப்பட்டு வருகின்றன.

இந்தியாவின் தமிழ்நாடு முதலமைச்சரால் அன்பளிப்புச் செய்யப்பட்ட பொருள்கள் விசேடமாக ஒழுங்கமைக்கப்பட்ட ரயில் மூலம் நேற்று( வியாழக்கிழமை) காலை ஹற்றனைச் சென்றடைந்தது.

ஹற்றன் – அம்பகமுவ பிரதேச செயலகத்துக்குட்பட்ட பகுதிகளுக்கான தமிழக நிவாரணப்பொருள்கள் கொழும்பிலிருந்து ரயிலில் ஹற்றன் ரயில் நிலையத்துக்கு எடுத்து வரப்பட்டு உடனடியாகவே விநியோகம் இடம்பெற்றன.



இந்த நிலையில் நுவரெலியா மாவட்டத்தில் அம்பகமுவ பிரதேச செயலகத்துக்குட்பட்ட பகுதியில் 67 கிராம சேவகர் பிரிவுகளில் தெரிவு செய்யப்பட்ட 23 ஆயிரத்து 350 குடும்பங்களுக்கு வழங்குவதற்காக அரிசி தொகைகள் நேற்று காலை அம்பகமுவ பிரதேச செயலாளர் தலைமையிலான குழு ரயிலில் வந்த இந்த நிவாரணப் பொருள்களைப் பொறுப்பேற்று உடனடியாக மக்களுக்கு பகிர்ந்தளிப்பதற்காக கிராம சேவகரின் ஊடாக லொறிகளில் மூலம் இந்த அரிசி தொகைகள் அனுப்பப்பட்டன.

மேலும், கிராம சேவகர்களின் ஊடாகக் கொண்டு செல்லப்படும் உணவுப் பொருள்கள் எதிர்வரும் நாள்களில் பயனாளர்களுக்கு வழங்கப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

இந்நாளிதழ் யாழ்ப்பாணம், இல-551A, கஸ்தூரியார் வீதியிலுள்ள Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 03.06.2022இல் வெளியிடப்பெற்றது.